1973 மார்ச் 1]

Private tuitions by College teachers

*191 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the authorities know that college teaching staff regularly conduct tutorial classes in their houses for students studying in the same college they are serving;

(*b*) whether the Government examine to ban the entry of these teaching staff into the academic councils of Universities and Government; and

(*c*) whether the Government examine their prohibition from valuing examination papers?

The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN: (*a*) There is no information with the Government.

(*b*) There is no need to ban the entry of such persons into the academic councils of Universities.

(*c*) Examinership to teaching staff is offered by Universities concerned. There is no ban on valuing examination papers, subject to a declaration from Examiners that they have not undertaken any private tutorial or coaching work during the period of examinership in the University.

திரு. என். டென்னிஸ்: இவ்விதம் தடைவிதிப்பது கல்வித்தரத்தை உயர்த்தவும், ஒழுங்கீனங்களைப் போக்கவும் வழிவகுக்கும் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எக்சாமினர்களாக நியமிக்கப் படுவதற்குத்தான் அவர்கள் தாங்கள் எங்கும் தனியாகச் சொல்லிக் கொடுக்க வில்லை, தன்னைச் சேர்ந்தவர்களோ, தாமோ எவ்விதப் பரீட்சைக்கும் போக வில்லை என்பதாக ஒரு டிக்ளரேஷன் கொடுக்கிற நிலைமை இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அமைச்சர் அவர்கள் டிக்ளரேஷன் வாங்கப் படுவதாகச் சொன்னார்கள். இந்த முறையில் ஏதாவது புகார் வந்திருக்கிறதா? டிக்ளரேஷன் கொடுத்துவிட்டு, அதற்கு மாறாக யாரும் நடக்காமல் இருக் கிறார்களா என்பதைப் பார்த்துக்கொள்ள வழியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கத்திற்கு எவ்விதப் புகாரும் வந்திருப்பதாகத் தெரியவில்லை. புகார்களும் துணைவேந்தருக்குத் தான் அளிக்கப்பட வேண்டும். தவறு இருப்பதாகத் தெரிந்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது சம்பந்தமாகப் பல்கலைக் கழகத்திற்கு ஏதாவது புகார்கள் வந்து, நடவடிக்கை எடுத்திருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தினிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து அளிக்கலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இப்படி மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்க பல தனியார் நிறுவனங்கள் ஏற்படுவது, கல்லூரிகளையே பாதிப்பதாக இருக்கிறது, ஆகவே இவற்றை அரசு தடை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தடை செய்ய இயலாது. தனியார் நிறுவனங்களை ஒழுங்கு செய்வதற்குத்தான் ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். அதன் அடிப்படையில்தான் இந்தத் தனியார் நிறுவனங்கள் இயங்க முடியும்.

திரு. எஸ். வடிவேல் : மாலைநேரக் கல்லூரிகளில் வகுப்பு எடுக்கிறவர்களுக்கு தனியாகச் சம்பளமோ, அலவன்சோ கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கொடுக்கப்படுகிறது.

Pension for former District Board employees

* 192 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a large number of Ex-District Board employees entitled to pension have not been paid pension so far;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the steps proposed for the early payment to pensioners?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட பணி விதிகள் சட்டப் பூர்வமானவையாக இல்லாததால் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்ட முன்னாள் மாவட்டக் கழகப் பணியாளர்களை, அரசுப் பணியாளர்களாகக் கருத இயலாது என்று தெரிவித்து சென்னை, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட ஓய்வூதியச் செயற்குறிப்புகளைத் திருப்பி அனுப்பிவிட்டார்.